### தேனி - பழனி செட்டிபட்டி பேரூராட்சித் தலைவர் வி.பி.ஏ. மிதுன் சக்ரவர்த்தி தலைமையில்

# அ.ம.மு.க. நிர்வாகிகள் கழகத்தில் இணைந்தனர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்!



சென்னை, டிச. 24-

**முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தேனி வடக்கு மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி தலைவரும் - அ.ம.மு.க. கட்சியின் தேனி ஒன்றிய முன்னாள் செயலாளருமான வி.பி.ஏ. மிதுன்சக்ர வர்த்தி தலைமையில் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி கவுன்சிலர்கள் பி.பாண்டீஸ்வரன், எம்.சந்திரா, பி.சுகன்யா மற்றும் அ.ம.மு.க.கட்சி பேரூர் நிர்வாகிகள் தி.மு.க.வில் இணைந்தனர்.**

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று (23.12.2025) காலை, தேனி வடக்கு மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சித் தலைவரும் - அ.ம.மு.க. கட்சியைச் சேர்ந்த தேனி ஒன்றிய முன்னாள் செயலாளருமான வி.பி.ஏ. மிதுன் சக்ரவர்த்தி தலைமையில், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி 4வது வார்டு கவுன்சிலர் பி.பாண்டீஸ்வரன், 10வது வார்டு கவுன்சிலர் எம்.சந்திரா, 8வது வார்டு கவுன்சிலர் பி.சுகன்யா மற்றும் அ.தி.மு.க.வைச் சேர்ந்த பழனிசெட்டிபட்டி பேரூர் இணைச் செயலாளர் செல்வராஜ், அம்மா பேரவை செயலாளர் கலையரசன், அ.ம.மு.க.கட்சியைச் சேர்ந்த 1வது வார்டு செயலாளர் விஜய்கணேஷ், 11வது வார்டு செயலாளர் மாயகிருஷ்ணன், 15வது வார்டு செயலாளர் மாதவன் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழக முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன், எம்.பி., பழனி செட்டிபட்டி பேரூர் செயலாளர் செல்வம் ஆகியோர் உடனிருந்தனர்.

### தந்தை பெரியார் 52வது நினைவு நாள்:

# முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் - இன்று தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கிறார்!

## சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு அறிக்கை!



பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 52வது நினைவு நாளான இன்று (24.12.2025 - புதன்கிழமை) காலை 9.30 மணி அளவில் சென்னை, அண்ணா சாலையில் (சிம்சன் அருகில்) அமைக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்கள்.

நாள் : 23.12.2025.

**நே.சிற்றரசு,**
செயலாளர்,
சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.

### தென்காசி வடக்கு மாவட்டத்தில்

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

*தென்காசி. டிச.24-*

*முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க (24.12. 2025) இன்று மகாத்மா காந்தி தேசிய வேலை வாய்ப்பு உறுதியளிப்பு சட்டத்தை சிதைத்து கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை முடக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு துணை போகும் அ.தி.மு.க. வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் 4 இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் காலை 10 மணிக்கு நடைபெறுகிறது. என தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ. ராஜா எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.*

*அது பற்றிய அட்டவணை விவரம் வருமாறு.*

*1. குருவிகுளம் ஒன்றியம், குருவிகுளம் தெற்கு, குருவிகுளம் வடக்கு,குருவிகுளம் மேற்கு, குருவிகுளம் கிழக்கு, திருவேங்கடம் பேரூர்தேரடி திடல்.*

*2. மேலநீலிதநல்லூர் ஒன்றியம்,*

*மேலநீலிதநல்லூர் கிழக்கு, மேலநீலிதநல்லூர் மேற்கு, மேலநீலிதநல்லூர் தெற்கு குருக்கள் பட்டி பிரதான சாலை.*



*3. சங்கரன்கோவில் ஒன்றியம், சங்கரன்கோவில் தெற்கு, சங்கரன்கோவில் வடக்கு, சங்கரன்கோவில் நகரம்சங்கரன்கோவில் ஒன்றிய அலுவலகம் முன்பு.*

*4. வாசுதேவநல்லூர் ஒன்றியம், வாசுதேவநல்லூர் வடக்கு, வாசுதேவநல்லூர் தெற்கு, புளியங்குடி கிழக்கு நகரம், புளியங்குடி மேற்கு நகரம்,ராயகிரி பேரூர்,சிவகிரி பேரூர், வாசுதேவநல்லூர் பேரூர்வாசுதேவநல்லூர் பயணியர் விடுதி முன்பு.*

*ஆகவே மாநில,மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள்,ஒன்றிய நகர, பேரூர், கிளை கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

# அம்பத்தூர் தெற்கு பகுதியில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை,டிச.24–

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு ”அன்னம் தரும் அமுதக்கரங்கள் மாபெரும் திட்டத்தின் 306 ஆம் நாளான – கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (22.12.2025), அம்பத்தூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 89,கோல்டன் காலனி, அவ்வை நகர் கார்னர், 2) வட்டம் 88, தேவர் நகர் மெயின் ரோடு, கொடிக்கம்பம், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி, தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் – இதுதான் ஒரே இலக்கு! என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, டி.எஸ்.பி ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர் நாகராஜ், பி.கே.மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல் பி எஃப்.மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் என்ற நீலகண்டன் எம்.சி து.ஆயிரம், ஜி.வி. நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி அம்பத்தூர் தெற்கு/வடக்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர். டீக்கா, வி.ரவிந்திரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ.ராதாகிரு ஷ்ணன், த.கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, மு.சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன்குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R. அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L. சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்ட னர்.

### கிருஷ்ணகிரி – காவேரிப்பட்டினம் மேற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த

# சமூக சேவகர் சங்கர் தருமன் கழகத்தில் இணைந்தார்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்



சென்னை, டிச. 24-

**முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப்பட்டினம் மேற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த சமூக சேவகர் சங்கர் தருமன் அவர்கள் தி.மு.க.வில் இணைந்தார்.**

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நேற்று (23.12.2025) காலை, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப்பட்டினம் மேற்கு ஒன்றியத்தைச் சேர்ந்த சமூக சேவகர் சங்கர் தருமன் அவர்கள், தி.மு.க.வில் இணைந்தார்.

அதுபோது கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், மண்டலப் பொறுப்பாளரும் – அமைச்சருமான அர.சக்கரபாணி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன், எம்.எல்.ஏ. ஆகியோர் உடனிருந்தனர்.

### ஜூன் 15- முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி பிறந்தநாள்! ஆண்டு தோறும்

# விழுப்புரம் மாவட்டத்தில் அரசு விழாவாகக் கொண்டாட நிதி ஒப்பளிப்பு!

## அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. கோரிக்கை - தமிழ்நாடு - அரசாணை வெளியீடு!

*சென்னை, டிச.24-*

*செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் ஏ. கோவிந்தசாமி நினைவு அரங்கம் வழுதரெட்டி கிராமம், விழுப்புரம் மாவட்டம் ஏ. கோவிந்தசாமி அவர்களின் பிறந்த நாளான ஜுன் 15ஆம் தேதி விழுப்புரம் மாவட்டத்தில் அரசு விழாவாகக் கொண்டாடுதல் ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூ.25,000/க்கு நிதி ஒப்பளிப்பு செய்தல் ஆணை வெளியிடப்படுகிறது.*

*விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினரின் கடிதத்தில் 1952ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் விக்கிரவாண்டி தொகுதியில் போட்டியிட்டு வென்றவருமான ஏ.ஜி. என அன்புடன் அழைக்கப்படும் முன்னாள் வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களின் பெருமையை நினைவு கூரும் வகையில் விழுப்புரம் மாவட்டம், வழுதரெட்டி கிராமத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நினைவு அரங்கம் அமைக்கப்பட்டு, 28.012025 அன்று முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகவும் முன்னாள் வேளாண்மைத் துறை அமைச்சர் கிர் ஏ. கோவிந்தசாமி அவர்களின் பிறந்த நாளான ஜுன் 15 ஆம் தேதி விழுப்புரம் மாவட்டம் வழுதரெட்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள மணிமண்டபத்தில் அவரது நினைவு நாள் மற்றும் பிறந்த நாளுக்கு அரசு சார்பில் அன்னாரது திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்துவதற்கான ஆணையை வெளியிடுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.*

*அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர். முன்னாள் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களின் பிறந்த நாளான ஜுன் 15 ஆம் தேதி விழுப்புரம் மாவட்டம் வழுதரெட்டி கிராமத்தி அமைக்கப்பட்டுள்ள ஏ. கோவிந்தசாமி நினைவு அரங்கத்தி அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் மாலையணிவித்து மரியாதை செலுத்திட ரூ 25000 க்கு ரூபாய் மட்டும் நிதி ஒப்பளிப்பு செய்தும் 2026.27ஆம் நிதியாண்டு முதல் தொடர் செலவினமாக நிருவாக அனுமதியளித்தும் அரசு ஆணையிடுகிறது.*



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதிக்குட்பட்ட கெடார் ஊராட்சியில் தமிழக அரசு சார்பில் ரூபாய் 56.80 கோடி மதிப்பில் புதியதாக கட்டப்பட்ட விழுப்புரம் மாவட்ட மாதிரி பள்ளியினை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொளி வாயிலாக திறந்து வைத்தார். அதனை விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா நடைமுறைக்கு கொண்டு வந்தார். இந்நிகழ்வில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன்.கௌதம சிகாமணி, மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெயச்சந்திரன், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், காணை ஒன்றிய பெருந்தலைவர் கலைச்செல்வி, விக்கிரவாண்டி ஒன்றிய பெருந்தலைவர் , ஒன்றிய செயலாளர்கள் கல்பட்டு ராஜா, ஆர்.பி. முருகன், நல்லாப்பாளையம் முருகன், வேம்பி ரவி, ஜெயபால், கில்பர்ட் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### 100 நாள் வேலைத்திட்டம் ஒழிப்பு: ஒன்றிய பா.ஜ.க. அரசையும், துணை போகும் அ.தி.மு.க.வையும் கண்டித்து

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் அறிக்கை!

*கன்னியாகுமரி, டிச. 24-*

*கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி, கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைத்து, கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை முடக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அதற்கு துணை போகும் அ.தி.மு.க. வையும் கண்டித்து கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் இன்று*



*(24.12.2025 புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு கீழே குறிப்பிட்ட ஒன்றிய அலுவலகங்கள் முன்பு அந்தந்த தி.மு.க. ஒன்றிய கழக செயலாளர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.*

*ஆகவே, இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. வின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள், அனைத்து கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி இந்நாள் முன்னாள் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், அனைத்து கூட்டணி கட்சிகளின் தொண்டர்கள், 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தில் பயன்பெறுவோர் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்ற வகையில் அந்தந்த ஒன்றிய கழகச் செயலாளர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்து தமிழ்நாட்டு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும், அதற்கு துணை போகும் அ.தி.மு.க.வை கண்டித்தும் முழக்கங்களை எழுப்பி கண்டன ஆர்ப்பாட்டத்தினை வெற்றி பெற செய்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

*ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் இடங்களின் விபரம்:*

*1. அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம் - கொட்டாரம் சந்திப்பு*

*2. தோவாளை ஊராட்சி ஒன்றியம் - திட்டுவிளை சந்திப்பு*

*3. இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம் - இராஜாக்கமங்கலம் சந்திப்பு*

*4. குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியம் - குருந்தன்கோடு சந்திப்பு*

*5. தக்கலை ஊராட்சி ஒன்றியம் - முளகுமூடு தபால் நிலையம் அருகில்*

*இவ்வாறு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*